மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஸ்ரீவைகுண்டம்.
முன்னிலை: திரு. M. ஹரிராமகிருஷ்ணன், M.A., M.Phil., LLM.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, ஸ்ரீவைகுண்டம்.
திருவள்ளுவராண்டு 2057–ம் வருடம் வைகாசி திங்கள் 22 ம் நாள் வெள்ளிக்கிழமை
2026 ம் ஆண்டு ஜுன் மாதம் 05 ஆம் நாள் வெள்ளிக்கிழமை
அசல் வழக்கு எண்.63/2025
**CNR.No. TNTT-08000066-2025**

சிவஞானம் ... வாதி

...எதிர்...

1.அ.ராமகிருஷ்ணன்
2.கு.அர்ச்சுனன்(இறப்பு) ... பிரதிவாதி

இவ்வழக்கில் வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.அனந்தசுப்பிரமணியன் அவர்கள் முன்னிலையாகியும், 1ம் பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.ச.ஆறுமுகப்பெருமாள் அவர்கள் முன்னிலையாகி எதிர்வழக்குரை தாக்கல் செய்த போதிலும், வாதி தரப்பு சாட்சியங்களை குறுக்கு விசாரணை செய்ய முன்வராமல் தோன்றாத் தரப்பினராகியும், 2ம் பிரதிவாதி இறந்துவிட்ட நிலையிலும், இருதரப்பு கற்றறிந்த வழக்கறிஞர்கள் செய்து கொண்ட வாத உரைகளை கேட்டறிந்தும், வழக்காவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்து வந்த இந்த வழக்கில் இன்று (05.06.2026) இந்நீதிமன்றம் ஆய்ந்து வழங்கும்

**தீர்ப்புரை**

தபசில் சொத்தினைப் பொறுத்து பிரதிவாதிகள் 04.01.2007ம் தேதி மோசடியாக உற்பத்தி செய்துள்ள பெருங்குளம் சார்பதிவக கிரைய ஆவண



HARIRAMAKRISHNAN
Digitally signed by HARIRAMAKRISHNAN
Date: 2026.06.16 14:45:34 +0530

எண்கள்.06/2007, 07/2007 ஆகியவைகள் இல்லாது மற்றும் செல்லா நிலையது என விளம்புகை செய்யக் கோரி தாவா வழக்கு தாக்கல் செய்யப்பபட்டுள்ளது.

**2. வழக்குரை சுருக்கம்:**

அ)தபசில் 1, 2 இலக்க சொத்துக்களானது ஆதியில் வாதியின் தாயரான பெ.ராமலெட்சுமி அம்மாளுக்கு 13.10.1966ம் தேதி அணியாபரநல்லூரை சேர்ந்த சண்முககோனரிடம் பெருங்குளம் சார்பதிவக கிரைய ஆவண எண்.761/1966ன் படி கிரையம் வாங்கியதன் பேரிலும், தபசில் 3ம் இலக்க சொத்தானது 29.07.1972ம் தேதி அணியாபரநல்லூரை சேர்ந்த கருப்பசாமி என்பவரிடம் கிரைய ஆவண எண்.7761/1972ன் படி கிரையம் வாங்கியதன் பேரிலும் பாத்தியப்பட்டு பட்ட எண்கள். 1175 மற்றும் 1505 ஏற்பட்டு எவ்வித இடைஞ்சலுமின்றி அனுபவம் செய்து வந்தார். கடந்த 05.12.1996ம் தேதி வாதியின் தாயார் வடக்கு காரசேரியை சேர்ந்த 2ம் பிரதிவாதிக்கு பொது அதிகார ஆவண எண்.281/1996ன்படி பொது அதிகார ஆவணம் கொடுத்து தபசில் சொத்துக்களை விற்பனை செய்ய ஏற்பாடு செய்தார்.

ஆ)இந்நிலையில் வாதியின் தாயார் கடந்த 11.02.2001ம் தேதி எவ்வித விருப்புறுதி ஆவணமும் எழுதி வைக்காமல் இறந்துவிட்டார். ராமலெட்சுமி அம்மாளுக்கு வேலம்மாள், ஆயிரத்தம்மாள் மற்றும் வாதி ஆகியோர் வாரிசுகள் ஆவர். மேற்படியார்களுக்குள் கடந்த 2001ம் வருடத்தில் ஏற்பட்ட வாய்மொழி பாகப்பிரிவினையில் தபசில் சொத்துக்கள் வாதியின் பாகத்துக்கு ஒதுக்கப்பட்டது. 27.11.2024ம் தேதி 1ம் பிரதிவாதி அவரது வகையாட்களுடன் தபசில் சொத்தில் உள்ளே அத்துமீறி நுழைய முயன்றதை வாதி தடுத்து நிறுத்தியதில் தபசில் சொத்துக்களில் 1, 2 பிரதிவாதிகளுக்கு உரிமை இருப்பதாக கூறிக்கொண்டு தபசில் சொத்துகளில் இருந்து வாதியை எப்படியாவது வெளியேற்ற வேண்டும் என்ற எண்ணத்தில் வாதியின் அனுபவத்திற்கு வீண் இடையூறு செய்யும் முயற்சியில் ஈடுபட்டனர். வாதி அவரது உரிமை பாத்திய அனுபவ ஆவணத்தை காட்டி 1ம் பிரதிவாதியை எச்சரித்துவிட்டார்.



HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.06.16 14:45:41 +0530

இ)இந்நிலையில் 1, 2 பிரதிவாதிகள் மீண்டும் 10.12.2024 ல் தபசில் சொத்திற்குள் அத்துமீறி நுழைய முயற்சி செய்ததை வாதி தடுத்து நிறுத்தவும், 1ம் பிரதிவாதிக்கு உரிமை இருப்பதாக கூறி கிரைய ஆவணத்தை வாதியிடம் கொடுத்தனர். அதில் வாதியின் தாயாரின் அங்கீகார முகவரான 2ம் பிரதிவாதி 04.01.2007ம் தேதி பெருங்குளம் சார்பதிவக கிரைய ஆவண எண்கள்.06/2007 மற்றும் 07/2007ன் படி 1ம் பிரதிவாதிக்கு கிரையம் எழுதிக் கொடுத்ததாக கண்டுள்ளது. வாதியின் தாயார் கடந்த 11.02.2001ம் தேதி காலம் சென்று மேற்படி பொது அதிகார ஆவணம் சட்டப்படி ரத்தாகி 6 ஆண்டுகள் கழித்த பின்பு 1, 2 பிரதிவாதிகள் மோசடியாக தபசில் சொத்துக்கு 1ம் பிரதிவாதி பெயரில் கிரைய ஆவணங்களை உற்பத்தி செய்துள்ளனர். மேற்படி கிரைய ஆவணங்கள் சட்டப்படி செல்லதக்கதல்ல. வாதி இது தொடர்பாக 13.12.2024 ல் தபசில் சொத்துக்களுக்கு வில்லங்கம் எடுத்து பார்த்ததில் பிரதிவாதிகள் தபசில் சொத்தை பொறுத்து கூட்டு சேர்ந்து மோசடியில் ஈடுப்பட்டுள்ளது உறுதியானது.

ஈ)1, 2 பிரதிவாதிகள் அவரது வகையாட்கள் மற்றும் 3ம் நபர்களுடன் மீண்டும் 18.12.2024 ல் தபசில் சொத்தில் அனுமதியின்றி சுற்றி பார்த்து வில்லங்க பாராதீனம் செய்ய முற்பட்டனர். வாதி ஊர் பெரியவர்களுடன் வந்து தடுத்துவிட்டார். பிரதிவாதிகளின் செயல் சட்டப்படிக்கும் நியாயப்படிக்கும் தவறானதாகும். பிரதிவாதிகள் எப்படியாவது தபசில் சொத்தினை வில்லங்க பாராதீனம் செய்து விடுவதாக வர்மித்து சென்றனர். எனவே, மோசடி கிரைய ஆவணங்களை இல்லாதது மற்றும் செல்லா நிலையது என விளம்புகை செய்யக் கோரி தாவா வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>3. 1ம் பிரதிவாதி தரப்பு எதிர்வழக்குரை சுருக்கம்</u>**

வழக்குரை சங்கதிகள் உண்மையல்ல என்று மறுக்கப்பட்டுள்ளன. தபசில் சொத்துக்களைப் பொறுத்து வாதியின் தாயார் பெ.ராமலெட்சுமி 05.12.1996 ல் கிரைய தொகை ரூ.80,000/-பெற்றுக் கொண்டு 2ம் பிரதிவாதிக்கு பொது அதிகார ஆவணம் எழுதிக் கொடுத்தார். தபசில் சொத்தினை சுற்றியுள்ள இடங்களையும் 2ம் பிரதிவாதி பொது அதிகார ஆவணம் மூலம் கிரையம் பெற்று அனுபவித்து வந்தார். அதன்



HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.06.16 14:45:44 +0530

அடிப்படையில் 05.12.1996 லிருந்து 2ம் பிரதிவாதி தபசில் சொத்தினை அனுபவித்து வந்து 1ம் பிரதிவாதிக்கு 04.01.2007 ல் கிரையம் செய்து கொடுத்து அனுபவத்தை ஒப்படைத்துவிட்டார். அது முதல் தபசில் சொத்தினை 1ம் பிரதிவாதி அனுபவித்து வருகிறார். எனவே, இவ்வழக்கினை தள்ளுபடி செய்ய வேண்டும்.

**4.எழுவினாக்கள்**

வழக்குரை, எதிர் வழக்குரைகள் மற்றும் வழக்காவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டு கீழ்கண்ட எழுவினாக்கள் வனையப்பட்டுள்ளன.

1. 04.01.2007 ம் தேதி பெருங்குளம் சார்பதிவக கிரைய ஆவண எண்கள்.06/2007 மற்றும் 07/2007 இல்லாது மற்றும் செல்லா நிலையதா?
2. வாதி கோரும் விளம்புகைப் பரிகாரங்கள் கிடைக்கத்தக்கதா?
3. வாதிக்கு கிடைக்கக் கூடிய இதர பரிகாரம் யாது?

5. வாதி தரப்பில் வாதி வா.சா.1 ஆகவும், ராமலெட்சுமி என்பவர் வா.சா.2 ஆகவும், விசாரிக்கப்பட்டு வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.10 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. 1ம் பிரதிவாதி வழக்கறிஞர் மூலம் முன்னிலையாகி எதிர்வழக்குரை தாக்கல் செய்த போதிலும் வாதி தரப்பு சாட்சிகளை குறுக்கு விசாரணை செய்ய முன்வராமல் தோன்றாத்தரப்பினர் ஆகியுள்ளார். 2ம் பிரதிவாதிக்கு அனுப்பப்பட்ட அழைப்பாணை அவர் இறந்து விட்டதாக திரும்ப வந்துள்ளது. 2ம் பிரதிவாதிக்கு எதிராக மேல் நடவடிக்கை தேவையில்லை என்றும், அவருக்கு எதிரான பரிகாரம் அற்றுப் போய் விட்டதாக எடுத்துக் கொள்ள வேண்டும் என்று குறிப்பாணை தாக்கல் செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்டுள்ளது.

**எழுவினாக்களுக்கான தீர்வு**

6. வாதியின் பெற்றோர் பெருமாள் பிள்ளை – ராமலெட்சுமி அம்மாள் ஆவர். ராமலெட்சுமி அம்மாள் 11.02.2001 ம் தேதி இறந்துவிட்டார் என்று வா.சா.ஆ.5 இறப்பு சான்றிதழிலிருந்து தெளிவாகிறது. வாதியின் தந்தை பெருமாள் பிள்ளை 19.10.1951 ம் தேதி இறந்துவிட்டார் என்று வா.சா.ஆ.6 சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ளது. வாதியின்



HARIRAMAKRISHNAN
Digitally signed by HARIRAMAKRISHNAN
Date: 2026.06.16 14:45:47 +0530

தாயாருக்கு வாதி, வேலம்மாள் மற்றும் ஆயிரத்தம்மாள் ஆகியோர் வாரிசுகள் என்று வா.சா.ஆ.6 வாரிசு சான்றிதழ் இருந்து அறிய முடிகிறது வாதியின் தாயார் உயிரோடு இருந்த காலத்தில் கடந்த 13.10.1966 ஆம் தேதி பெருங்குளம் சார்பதிவாளர் அலுவலக ஆவண எண்.761/1966 வாயிலாக சண்முகக் கோனார் என்பவரிடமிருந்து அணியாபரநல்லூர் கிராமம், அயன் புஞ்சை சர்வே எண்.847ல் 2 ஏக்கர் 68 செண்டில் தென்பாதி 1 ஏக்கர் 34 செண்ட் சொத்தான தபசில் 1ம் இலக்க சொத்தினையும், அயன் புஞ்சை சர்வே எண்.846ல் 2 ஏக்கர் செண்ட் 70ல் வடக்கடையை 68 செண்ட் விஸ்தீரணணம் உடைய சொத்தான 2ம் தபசில் சொத்தினையும் வா.சா.ஆ.1 வாயிலாக கிரையம் வாங்கியுள்ளார்.

7.அதே போன்று 3ம் தபசில் சொத்தான அயன் புஞ்சை சர்வே எண்.991ல் 1 ஏக்கர் செண்ட் 44ஐ வா.சா.ஆ.2 வாயிலாக கருப்பசாமி என்பவரிடமிருந்து 29.09.1972ம் தேதி கிரையம் வாங்கியுள்ளார். வா.சா.ஆ.1, 2ன்படி வாதியின் தாயார் கிரையம் வாங்கிய தபசில் 1 முதல் 3 இலக்க சொத்துக்களைப் பொறுத்து கடந்த 05.12.1996ம் தேதி பெருங்குளம் சார்பதிவாளர் அலுவலக ஆவண எண்.281/1996 வாயிலாக 2ம் பிரதிவாதிக்கு பொது அதிகார ஆவணமான வா.சா.ஆ.3ஐ எழுதி கொடுத்துள்ளார். 1ம் பிரதிவாதியின் எதிர்வழக்குரையில் வாதியின் தாயார் ரூ.80,000 பெற்றுக் கொண்டு பொது அதிகார ஆவணம் எழுதி கொடுத்ததாக சொல்லப்பட்டுள்ளது. ஆனால் வா.சா.ஆ.3ஐ அவ்வாறு ரூ.80,000 பெற்றுக்கொண்டு பொது அதிகாரம் ஆவணம் எழுதிக் கொடுத்ததாக துலங்கவில்லை. மேலும், 1ம் பிரதிவாதி மேற்படி சங்கதியை நிரூபிக்க முன்வரவில்லை.

8.வாதியின் தாயார் ராமலெட்சுமி அம்மாள் கடந்த 11.12.2001ம் தேதி இறந்துவிட்டார் என்று வா.சா.ஆ.5 இறப்பு சான்றிதழ் வாயிலாக தெரியவரும் நிலையில் வாதியின் தாயார் இறந்த 6 ஆண்டுகள் கழித்து 2ம் பிரதிவாதி அவரது மகனான 1ம் பிரதிவாதிக்கு தபசில் 1ம் இலக்க சொத்தினை பெருங்குளம் சார்பதிவாளர் அலுவலக ஆவண எண்.6/2007 வாயிலாகவும், 2, 3ம் இலக்க சொத்துக்கள் மற்றும் இவ்வழக்கில் சேராத



HARIRAMAKRISHNAN
Digitally signed by HARIRAMAKRISHNAN
Date: 2026.06.16 14:45:50 +0530

சர்வே எண்கள்..992/1 மற்றும் 898 ஆகியவற்றினைப் பொறுத்து ஆவண எண்.7/2007 வாயிலாகவும் கடந்த 04.01.2007ம் தேதி வா.சா.ஆ.3 பொது அதிகார ஆவணம் பயன்படுத்தி அதிகார முகவர் நிலையில் எழுதி கொடுத்துள்ளார் என்று வா.சா.ஆ.8, 9 கிரைய ஆவணங்களில் இருந்து அறிய முடிகிறது.

9.பொது அதிகார ஆவணம் எழுதிக் கொடுத்த முதல்வர் அல்லது அதனை எழுதிப் பெற்ற முகவர் இறந்து போய்விடின் பொது அதிகார ஆவணம் இந்திய ஒப்பந்தச் சட்டம் பிரிவு 201ன் கீழ் முடிவுக்கு வந்துவிடும். இந்நேர்வில் வா.சா.ஆ.3ஐ எழுதிக் கொடுத்த வாதியின் தாயார் ராமலெட்சுமி அம்மாள் இறந்தவுடன் வா.சா.ஆ.3 பொது அதிகார ஆவணம் அதன் செயல்தன்மையை இழந்துவிடும். இந்நிலையில், வா.சா.ஆ.3ன் அடிப்படையில் அதன் முகவரான 2ம் பிரதிவாதி எந்த ஆவணமும் எழுதிக் கொடுக்க சட்டப்படி அதிகாரம் கிடையாது. ஆனால், ராமலெட்சுமி அம்மாள் 11.02.2001ம் தேதி இறந்த பிறகு 6 ஆண்டுகள் கழித்து 2ம் பிரதிவாதி அவரது மகனான 1ம் பிரதிவாதிக்கு தபசில் சொத்துக்களை வா.சா.ஆ.8, 9 வாயிலாக கிரையம் செய்து கொடுத்துள்ளார். இது தொடர்பாக வா.சா.ஆ.7 வில்லங்க சான்றிதழும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

10.வா.சா.ஆ.3 பொது அதிகார ஆவணம் வாதியின் தாயார் ராமலெட்சுமி அம்மாள் இறந்த தேதியில் சட்டப்படி முடிவுக்கு வந்த நிலையில் வா.சா.ஆ.3ஐ பயன்படுத்தி தபசில் சொத்துக்களை கிரையம் கொடுக்க 2ம் பிரதிவாதிக்கு எந்த அதிகாரமும் கிடையாது. எனவே, வா.சா.ஆ.8, 9 ஆவணங்கள் தபசில் சொத்துக்களில் ராமலெட்சுமி அம்மாளின் வாரிசுகளுக்கு உள்ள உரிமை மூலத்தை எந்த வகையிலும் பாதிக்காது மற்றும் தபசில் சொத்துக்களைப் பொறுத்து சட்டப்படி செல்லத்தக்கதல்ல. ராமலெட்சுமி அம்மாளின் இறப்பிற்கு பிறகு தபசில் சொத்துக்கள் அவரது வாரிசுகளான வாதி, வேலம்மாள் மற்றும் ஆயிரத்தம்மாள் ஆகியோருக்கிடையே நடந்த பாகப்பிரிவினையில் வாதிக்கு ஒதுக்கப்பட்டதாக வா.சா.1, 2 அளித்துள்ள சாட்சியத்திற்கு மாறான சாட்சியம் இல்லை. மேலும், இதனை பொறுத்து ஆட்சேபிக்க வாதியின் சகோதரிகளுக்கு தான் உரிமை உண்டு.

HARIRAMAKRISHNAN
Digitally signed by HARIRAMAKRISHNAN
Date: 2026.06.16 14:45:55 +0530

11. வா.சா.ஆ.8, 9 கிரைய ஆவணங்கள் 2007ம் தேதியில் எழுதிக் கொடுக்கப்பட்டிருந்த போதிலும் தபசில் 2, 3ம் இலக்க சொத்துக்களுக்குரிய கணினி பட்டா மற்றும் 1ம் இலக்க சொத்திற்குரிய கூட்டுப்பட்டா ஆகியவையான வா.சா.ஆ.4 வாதியின் தாயார் பெயரிலேயே இருந்து வருகின்றன. 1ம் பிரதிவாதி பெயருக்கு எந்த ஆவணமும் நாளது தேதி வரை தபசில் சொத்துக்களைப் பொறுத்து ஏற்படவில்லை. தபசில் சொத்துக்களின் பட்டாக்களுக்கு வாதியின் தாயார் பெயரிலேயே 1434ம் பசலிக்கான வரி ரசீதுகள் 27.11.2024ம் தேதி செலுத்தப்பட்டுள்ளன என்று வா.சா.ஆ.10 தெரிவிக்கிறது. பொது அதிகார ஆவணத்தின் அடிப்படையில் சொத்துக்களின் உடைமை மற்றும் உரிமை மூலத்தினை மாற்றியளிக்க இயலாது. வா.சா.ஆ.3ல் அவ்வாறு ஒப்படைக்கப்பட்டதாகவும் துலங்கவில்லை.

12. தமிழ்நாடு பட்டாப் பதிவு புத்தகச் சட்டம் பிரிவு 6, மேற்படி சட்டத்தின் 3ம் பிரிவு படி வட்டாட்சியரால் வழங்கப்பட்ட பட்டா பதிவு புத்தகத்தில் உள்ள பதிவுகள், வேறு வகையாக அதில் குறித்துரைக்கப்பட்டாலன்றி, அந்த பட்டாப் பதிவு புத்தகத்தில் பதியப்பட்டுள்ள நிலத்தின் பகுதிகளுக்கு எவருடைய பெயரில் அந்த பட்டா பதிவு புத்தகம் வழங்கப்பட்டிருக்கிறதோ, அவருடைய எந்த முந்தைய வில்லங்கமும் இல்லாத பாத்தியதை குறித்த சான்றாக இருத்தல் வேண்டுமென்று கூறுகிறது. தமிழ்நாடு பட்டா பதிவு புத்தகச் சட்டம் பிரிவு 4 பட்டாப் பதிவு புத்தகத்திலுள்ள பதிவுகளும் பட்டா பதிவு புத்தகத்திலுள்ள பதிவுகளில் சான்றிட்ட படியும் மாறாக மெய்ப்பிக்கப்படும் வரையிலோ அவற்றிற்கு பதிலாக புதிய பதிவு ஒன்று சட்டப்படி அமைக்கப்படும் வரையிலோ, உண்மையானவையாகவும், சரியானவையாகவும் இருப்பதாக அனுமானித்தல் வேண்டும் என்று கூறுகிறது.

13. தமிழ்நாடு பட்டா பதிவுப் புத்தகத்தின் மேற்படி சட்டப்பிரிவுகளின் அடிப்படையில் இவ்வழக்கின் சாட்சியங்களை பரிசீலனை செய்கையில் வா.சா.ஆ.1 பட்டாவிற்கு விரோதமாக சாட்சியம் எதுவும் இல்லை. அதே போன்று தபசில் சொத்துக்களின் அனுபவம் 1ம் பிரதிவாதி வசம் இருந்து வருவதற்கான சாட்சியமும் இல்லை. வாதி



HARIRAMAKRISHNAN
Digitally signed by HARIRAMAKRISHNAN
Date: 2026.06.16 14:45:58 +0530

தரப்பு சாட்சியங்களை பொய்யென மறுக்கும் வகையில் குறுக்கு விசாரணை செய்யவும், எதிர்வழக்குரை சங்கதிகளை மெய் என நிரூபிக்கவும் முன் வராமல் 1ம் பிரதிவாதி தோன்றாத் தரப்பினர் ஆகியுள்ளார். எனவே, இந்திய சாட்சியச் சட்டம் பிரிவு 114 ன் கீழ் 1ம் பிரதிவாதிக்கு எதிராகவே அனுமானம் கொள்ள வேண்டியுள்ளது. இத்தகு சூழ்நிலையில், தபசில் சொத்துக்களின் அனுபவம் வாதி வசம் இருந்து வருவதாகத் தான் எடுத்துக் கொள்ள முடியும்.

14.வா.சா.ஆ.9 கிரைய ஆவணத்தின் வாயிலாக 2, 3ம் இலக்க சொத்துக்களை மட்டும் அல்லாமல் ராமலெட்சுமி அம்மாளுக்கு பாத்தியப்படாத சர்வே எண்கள்.992/1 மற்றும் 898 ஆகியவைகள் குறித்தும் 2ம் பிரதிவாதி 1ம் பிரதிவாதிக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளார். மேற்படி சர்வே எண்களை பொறுத்து வாதி எந்தவித உரிமையும் கோரவில்லை. ஆகவே, ஆவண எண்.7/2007 ஐ முழுவதும் இல்லாது மற்றும் செல்லா நிலையது என விளம்புகை செய்ய இயலாது. மாறாக, மேற்படி ஆவணங்கள் 2, 3ம் இலக்க தபசில் சொத்துக்களைப் பொறுத்து மட்டுமே இல்லாது மற்றும் செல்லா நிலையது ஆகும். அதாவது, பகுதியாக செல்லும் திறனற்றது ஆகும்.

15.1ம் பிரதிவாதியின் தந்தையான 2ம் பிரதிவாதி தான் வா.சா.ஆ.3 பொது அதிகார ஆவணத்தை பயன்படுத்தி வா.சா.ஆ.8, 9 கிரைய ஆவணங்களை எழுதிக் கொடுத்துள்ளார். வா.சா.ஆ.8, 9 ஐ எழுதிக் கொடுக்க 2ம் பிரதிவாதிக்கு தனிப்பட்ட உரிமை மூலம் எதுவும் கிடையாது. 2ம் பிரதிவாதியின் மகனும் வா.சா.ஆ.8, 9 ன் கிரைய தாரருமான 1ம் பிரதிவாதி தாவா வழக்கில் கட்சி சேர்க்கப்பட்டுள்ள நிலையில் இறந்து போன 2ம் பிரதிவாதிக்கு வாதி தரப்பில் சொல்லியுள்ளது போல் வாரிசு சேர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியம் இல்லை. ஆகவே, 2ம் பிரதிவாதிக்கு எதிரான பரிகாரம் அற்றுப்போய் விட்டதாகிறது.

16.மேலே விவாதித்துள்ள காரணங்களின் அடிப்படையில், 04.1.2007ம் தேதிய பெருங்குளம் சார்பதிவாளர் அலுவலக கிரைய ஆவண எண்.6/2007 இல்லாது மற்றும் செல்லா நிலையது என்றும், கிரைய ஆவண எண்.7/2007 தபசில் 2, 3ம் இலக்க



HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN
Date: 2026.06.16
14:46:02 +0530

சொத்துக்களைப் பொறுத்து மட்டும் பகுதியாக இல்லாது மற்றும் செல்லா நிலையது என்று எழுவினா1 க்கும், அவ்வாறே வாதிக்கு விளம்புகைப் பரிகாரங்கள் கிடைக்கத்தக்கது என்று எழுவினா2 க்கும், வாதிக்கு கிடைக்கத்தக்க இதர பரிகாரம் எதுவும் இல்லை என்று எழுவினா3 க்கும் தீர்வு காணப்படுகிறது.

17.**முடிவாக,**

**அ)பெருங்குளம் சார்பதிவாளர் அலுவலக கிரைய ஆவண எண்.6/2007 இல்லாது மற்றும் செல்லா நிலையது என்றும்,**

**ஆ)கிரைய ஆவண எண்.7/2007 தபசில் 2, 3ம் இலக்க சொத்துக்களை பொறுத்து பகுதியாக இல்லாது மற்றும் செல்லா நிலையது என விளம்புகை செய்தும்,**

**இ)2ம் பிரதிவாதிக்கு எதிரான பரிகாரம் அற்றுப்போய் விட்டது என்றும் உத்தரவிட்டு வாதியின் வழக்கு செலவுத் தொகையுடன் பகுதியாக அனுமதிக்கப்பட்டு தீர்ப்பளிக்கப்படுகிறது.**

இந்த தீர்ப்புரை என்னால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, பிழை திருத்தம் செய்யப்பட்டு இன்று 2026-ம் ஆண்டு ஜுன் மாதம் 05ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.06.16 14:46:05 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஸ்ரீவைகுண்டம்.

<u>வாதி தரப்பு சாட்சிகள்</u>:

வா.சா.1-சிவஞானம்
வா.சா.2- ராமலெட்சுமி

<u>வாதி தரப்பு சான்றாவணங்கள்:</u>

| | | | |
|---|---|---|---|
| 1 | வா.சா.ஆ.1 | 13.10.1966 | வாதியின் தாயார் ராமலெட்சுமி அம்மாளுக்கு சண்முகக் கோனார் எழுதிக் கொடுத்த கிரைய |



HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.06.16 14:46:08 +0530

TNTT080000662025

| | | | |
|---|---|---|---|
| | | | ஆவணத்தின் சான்றிட்ட நகல் |
| 2 | வா.சா.ஆ.2 | 29.07.1972 | ராமலெட்சுமி அம்மாளுக்கு கருப்பசாமி எழுதிக்கொடுத்த கிரைய ஆவணத்தின் சான்றிட்ட நகல். |
| 3 | வா.சா.ஆ.3 | 05.12.1996 | 2ம் பிரதிவாதிக்கு ராமலெட்சுமி அம்மாள் எழுதிக் கொடுத்த பொது அதிகார ஆவணத்தின் சான்றிட்ட நகல். |
| 4 | வா.சா.ஆ.4 | 01.01.2025 | ராமலெட்சுமி அம்மாள் பெயரில் உள்ள தபசில் சொத்திற்குரிய கணினி பட்டா நகல் |
| 5 | வா.சா.ஆ.5 | – | ராமலெட்சுமி அம்மாளின் இறப்பு சான்றின் உண்மை நகல். |
| 6 | வா.சா.ஆ.6 | – | ராமலெட்சுமி அம்மாளின் வாரிசு சான்றின் உண்மை நகல் |
| 7 | வா.சா.ஆ.7 | 13.12.2024 | தபசில் சொத்திற்கு இணையவழியில் பெறப்பட்ட வில்லங்க சான்றின் நகல் |
| 8 | வா.சா.ஆ.8 | 04.01.2007 | 1ம் பிரதிவாதிக்கு தபசில் சொத்தினைப் பொறுத்து 2ம் பிரதிவாதி எழுதிக் கொடுத்த கிரைய ஆவண எண்.6/2007 ன் சான்றிட்ட நகல் |
| 9 | வா.சா.ஆ.9 | 04.01.2007 | 1ம் பிரதிவாதிக்கு தபசில் சொத்தினைப் பொறுத்து 2ம் பிரதிவாதி எழுதிக் கொடுத்த கிரைய ஆவண எண்.7/2007 ன் சான்றிட்ட நகல் |
| 10 | வா.சா.ஆ.10 | | ராமலெட்சுமி அம்மாளின் பெயரில் செலுத்தப்பட்ட வரி ரசீதுகள் எண்ணம் 2 |

<u>பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள்</u>:இல்லை

<u>பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள்:</u>இல்லை

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.06.16 14:46:13 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஸ்ரீவைகுண்டம்.

TNTT080000662025

மாவட்ட உரிமையியல் நீதிபதி.
ஸ்ரீவைகுண்டம்.
வரைவு/சீரான – தீர்ப்புரை
அசல் வழக்கு எண்.63/2025
நாள்.05.06.2026